பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 07 2026 THURSDAY 6.30 PM

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- வந்தே மாதரம் தேசிய பாடலுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பு அளிக்க வகை செய்யும், சட்டத்திருத்த மசோதாவுக்கு இன்று நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

- எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டை படிப்படியாக அதிகரிப்பதற்கான முயற்சிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- தமிழகத்திற்கு காவிரியில் 15 நாட்களுக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிட கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

- தமிழகத்தில் எல்-நினோ தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்க ஏழு பேர் கொண்ட பேரிடர் மேலாண்மை நிபுணர் குழுவை மாநில அரசு அமைத்துள்ளது.

- சீன தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Kiran George காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

\- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

வந்தே மாதரம் தேசிய பாடலுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பு அளிக்க வகை செய்யும், தேசிய கௌரவ அடையாள பாதுகாப்பு சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் கிடைத்துள்ளது.

மாநிலங்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட இம்மசோதா மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

அவையில், இம்மசோதாவை தாக்கல் செய்து பேசிய மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், ஜனகனமன தேசிய கீதத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ பாதுகாப்பை வந்தே மாதரம் தேசிய பாடலுக்கும் அளிக்கும் வகையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வந்தே மாதரம் பாடலை அவமதிக்கும் செயலில் ஈடுபடுவோருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்க இம்மசோதா வகை செய்வதாக அவர் கூறினார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி, இம்மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்த மசோதா நாட்டு மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

இம்மசோதா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிஜேபி உறுப்பினர் திரு சம்பித் பத்ரா தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு வந்தே மாதரம் தேசிய பாடலுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவாதத்திற்கு பதிலளித்து பேசிய இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தையும், தேசத்தின் அடையாளத்தையும், சுதந்திரப் போராட்ட தத்துவங்களையும், பாதுகாக்கும் வகையில் இந்த சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

1947 -ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி, நாட்டின் சுதந்திரத் திருநாளில் முதல் முறையாக அகில இந்திய வானொலியில் வந்தே மாதரம் பாடலை ஒலிபரப்ப சர்தார் வல்லபாய் பட்டேல் நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

எத்தனால் பயன்பாட்டை படிப்படியாக கொண்டுவரும் முயற்சியாக மத்திய அரசு 20 சதவீதம் எத்தனால் கலந்த பெட்ரோலை அறிமுகம் செய்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், எத்தனால் உற்பத்தியை அதிகரிக்கவும், அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்யவும், நீண்டகால தேவையை பூர்த்தி செய்யவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

எத்தனால் கலந்த பெட்ரோலை பயன்படுத்தும் வகையில் வாகன என்ஜின்களை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டின் நீண்டகால எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யவும், அதிக அளவு கச்சா எண்ணெய் இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலையை மாற்றுவதற்கும் எத்தனால் எரிபொருள் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய இந்தியாவில் நீடித்த வளர்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ், ஒரு கோடியே 12 லட்சம் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருவதாக மத்திய ஜல்சக்தித்துறை இணையமைச்சர் திரு வி. சோமண்ணா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், தமிழகத்தில் 12 ஆண்டுகளில் 91 லட்சம் கூடுதல் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமிழகத்திற்கு, இம்மாதம் 18-ஆம் தேதிவரை 2 கோடியே 33 லட்சம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு 14 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜல் ஜீவன் திட்டம் 2028-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் திரு சோமண்ணா குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>

தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் திரு ஹல்தார் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற கூட்டத்தில், காவிரி ஒழுங்காற்றுக்குழுவின் பரிந்துரையை ஏற்று, 15 நாட்களுக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று ஆணையத்தின் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

தமிழக நீர்வளத்துறை செயலர் திரு சத்தியபிரத சாஹூ, காவிரி தொழில்நுட்பக்குழு தலைவர் திரு சுப்பிரமணியன் ஆகியோர் சென்னையிலிருந்து காணொலி வாயிலாக இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் எல்-நினோ தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்க ஏழு பேர் கொண்ட பேரிடர் மேலாண்மை நிபுணர் குழுவை, மாநில அரசு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள மாநில அரசின் செய்திக்குறிப்பில், மாநிலத்தின் மழைப்பொழிவு மற்றும் வறட்சி நிலவரங்களை தொடர்ந்து கண்காணிப்பது, பாதிக்கப்பட்ட பகுதிகளை அடையாளம் கண்டு முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கும் பணியையும் இக்குழு மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தால் உருவாகக் கூடிய பேரிடர்களை எதிர்கொள்ள மாநில அரசின் தயார் நிலையை மேம்படுத்துவதற்கான பணிகளை இந்தக்குழு மேற்கொள்ளும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அருசு முன்னெச்சரிக்கை மற்றும் பேர்டர் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் எஸ் கண்மணி, பேராசிரியர் பாலாஜி நரசிம்மன், திரு அறிவுடை நம்பி அப்பாதுரை, பேராசிரியர் ரமேஷ் ராமச்சந்திரன், டாக்டர் ஆர், வெங்கடேசன், டாக்டர் ஜே கே பேட்டர்சன் எட்வர்ட், திரு பிரதீப் ஜான் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் வசூலிக்கப்படும் கட்டணங்களை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதி மற்றும் கல்வியாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு பள்ளிகளில் நடப்பாண்டில் மாணவர் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளதாக கூறினார்.

அரசு தொடக்கப்பள்ளிகளில் பெற்றோர் ஆர்வத்துடன் தங்களது குழந்தைகளை சேர்த்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆறாம் வகுப்பு முதலே கணினி அறிவியல் பாடத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கற்றலுக்கு ஏற்ற சூழலை பள்ளிகளில் ஏற்படுத்தவும், சுற்றுப்புற தூய்மையை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ராஜ்மோகன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

*(Sound Byte – வி ஆர் துரை – 32 Sec. )*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூர் மாவட்டம் சின்ன அல்லாபுரத்தில் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் கட்டப்பட்ட 87 லட்சம் ரூபாய் மதிப்பிலான கூடுதல் வகுப்பறைகளை மாநில அமைச்சர் திரு விஜய் பாலாஜி, இன்று திறந்துவைத்தார்.

---------

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் நடப்பு கல்வியாண்டுக்கான இளநிலை கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு தொழில்நுட்ப பட்டப்படிப்புகளுக்கான தரவரிசை பட்டியலை மாநில அமைச்சர் திருமதி கமலி வெளியிட்டார்.

----------------

காஞ்சிபுரத்தில் கடந்த கல்வியாண்டில் 12 தேர்ச்சி பெற்றவர்கள் உயர்கல்வியில் சேருவதற்கான விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டு முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா தலைமையில் இன்று நடைபெற்றது.

------------

அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் விரிவாக்கம் செய்யப்பட்ட இரத்த சுத்திகரிப்பு மையத்தை ஆட்சியர் திருமதி மிருணாளினி திறந்துவைத்தார்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சீன தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Kiran George காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-16 என்ற செட் கணக்கில், சக வீரரான தருண் Tharun Mannepalli-ஐ வென்றார்.

---------------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Manas Dhamne காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-----------

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<END>>>>>